**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S. No. 80 /2022**

**தேதி :18.4.2023**

**(வா.சா.–1) – ஈஸ்வரி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : (8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பில்)

சின்னசாமி கவுண்டருக்கு தெய்வாத்தாள் என்ற முதல் மனைவியும், முத்தாத்தாள் என்ற 2–ம் மனைவியும் உண்டு என்றால் சரிதான். மூத்த மனைவி உயிருடன் இருக்கும் போது தான் சின்னசாமி கவுண்டர் 2–ம் தாரமாக முத்தாத்தாளை திருமணம் செய்தார் என்றால் சரிதான். தெய்வாத்தாளுக்கு காளியாத்தாள், பொன்னாத்தாள் மற்றும் பவுனாத்தாள் ஆகிய 3 பெண் மக்கள் என்றால் சரிதான். மூத்த மகள் காளியாத்தாள் இறந்து போய் விட்டார். அவருடைய வாரிசுகள் நானும் 7 முதல் 9 பிரதிவாதிகளும் என்றால் சரிதான். இளைய மனைவி முத்தாத்தாளுக்கு 3–ம் பிரதிவாதி கருப்புசாமி மட்டும தான் ஒரே மகன் என்றால் சரிதான். அந்த கருப்புசாமியின் வாரிசுகள் தான் 4 முதல் 6 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் மேற்படி சின்னசாமி கவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியமான சொத்துக்கள். நான் தாக்கல் செய்துள்ள 3–ம் பிரதிவாதி வகையறா எழுதிக் கொடுத்துள்ள கிரைய ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்களில் நானோ, எனது சகோதரிகளோ, எனது தாயாரோ, எனது தாயாரின் சகோதரிகளோ தரப்பினர் அல்ல. தாவா சொத்துக்களை நானும் அனுபவிக்கிறேன். அது போல் 8 மற்றும் 9 பிரதிவாதிகளும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கும் வழக்கறிவிப்பு அனுப்பினேன். அவ்வாறு அவர்களுக்கு வழக்கறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 8 மற்றும் 9 பிரதிவாதிகள் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்ள எப்போதும் தயாராக இருந்தார்கள் என்றும் நான் தான் வீணாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தங்கள் பாகத்தை ஒதுக்குவதற்கு நீதிமன்றக் கட்டணம் செலுத்த தயாராக உள்ளார்கள் என்றும் நான் அவர்களுக்கு வழக்கு செலவுத் தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

14–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : (வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.04.20 14:03:59 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.